සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது
*All Rights Reserved]*

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாண கல்வித் திணைக்களம்
Western Provincial Education Department

පළමු වාර ඇගයීම - 2018
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | |
|---|---|---|
| 11 ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 | පුරවැසි අධ්‍යාපනය I පත්‍රය<br>குடியியற்கல்வி வினாத்தாள் - I<br>Civics Paper - I | පැය තුනයි<br>மூன்று மணி நேரம்<br>Three Hours |

- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான விடையை தெரிக.
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. ‘‘மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சிமுறை சனநாயக ஆட்சி முறையாகும்’’ எனக் கூறியவர்,

1. J.R. லவல் 2. ஆப்ரகாம் லிங்கன் 3. சீலர் 4. பிரித்தானிய கலைக்களஞ்சியம்

02. அரசாங்கம் ஒன்றின் பிரதான பிரிவுகளாவன,

1. சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை
2. நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, அரச சேவை
3. சட்டத்துறை, உள்ளூராட்சி மன்றம், நீதித்துறை
4. நீதித்துறை, பிரதேச சபை, நிறைவேற்றுத்துறை

03. பல கட்சி முறை காணப்படும் நாடு ஒன்று,

1. பெரிய பிரித்தானியா 2. சீனா 3. ஐக்கிய அமெரிக்கா 4. இந்தியா

04. ஒற்றை ஆட்சிமுறை நிலவும் நாடுகளைக் குறிக்கும் மிகப் பொருத்தமான விடை,

1. பெரிய பிரித்தானியா, ஜப்பான், பாக்கிஸ்தான், நேபாளம்
2. பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, இந்தியா
3. பெரிய பிரித்தானியா, சோமாலியா, பிரான்ஸ்
4. சுவிட்சர்லாந்து, அலாஸ்கா, சீனா, அமெரிக்கா

05. தற்போது நடைமுறையிலுள்ள பாராளுமன்ற முறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள்,

1. போர்த்துக்கல 2. ஒல்லாந்தர் 3. அரேபியர்கள் 4. பிரித்தானியர்

06. A - பாராளுமன்றத்தை கூட்டுதல், கலைத்தல், ஒத்தி வைத்தல்
B - பாராளுமன்ற ஆரம்ப கூட்டத் தொடரில் அரசாங்க கொள்கை திட்டம் முன்வைத்தல்
C - சட்ட விளக்கம் மற்றும் சட்டம் இயற்றுதல்
D - விசேட கொள்கைத் திட்டங்களை மக்கள் தீர்ப்புக்கு விடுத்தல்
E - நிதி நிருவாகம்

மேற்கூறப்பட்ட விடயங்களுள் சனாதிபதிகுரிய சட்டத்துறை அதிகாரங்களை கொண்ட விடை யாது?

1. C,D,E 2. A,B,D 3. A,B,C 4. B,C,D

07. ஒரு நாட்டின் அதி உயர் சட்டமாகக் கருதப்படுவது,

1. எழுதப்படாத யாப்பு 2. அரச நிர்ணய சபை
3. அரசியல் யாப்பு 4. பாராளுமன்ற தேர்தல் கொள்கை திட்டம்

08. பாராளுமன்ற அரசாங்க முறையில் விசேட இயல்புகள்,

1. சட்டத்துறை நிறைவேற்றுத்துறைக்கு நேரடியாக பொறுப்புக் கூற வேண்டியதில்லை.
2. நிறைவேற்றுத்றையின் அதிகாரம் ஒழுங்கமைக்கப்படுவது சனாதிபதியினால் ஆகும்.
3. சட்டத்துறை மூலம் நேரடியாக நிறைவேற்றுத் துறையை நிருவகிக்காமை.
4. சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும்.

09. 1978 ம் ஆண்டு அரசியல் யாப்புக்கிணங்க பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்றை தெரிவு செய்க.

1. இலங்கையின் இறுதியானதும் உயர் நீதிமன்றமாக மேன்முறையீட்டு நீதிமன்றமாகும்.
2. நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி பதவி அறிமுகப்படுத்தப்பட்டது.
3. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் 196 மக்கள் பிரதிநிதிகளையும் 225 பேரைக் கொண்ட பாராளுமன்றம் அறிமுகப்படுத்தப்பட்டது.
4 பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் (ஓம்புட்ஸ்மன்) பதவி அறிமுகப்படுத்தப்பட்டது.

10. 1978 ம் ஆண்டு அரசியல் யாப்பில் எட்டாவது உப தலைப்பின் படி இலங்கை எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

1. 8 2. 9 3. 6 4. 5

11. 1978 ம் ஆண்டு யாப்பின் எத்தனையாவது சீர்த்திருத்தச் சட்டத்தின் மூலம் இலங்கையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன,

1. இலங்கை குடியரசு யாப்பின் 10ம் சீர்த்திருத்தம்
2. இலங்கை குடியரசு யாப்பின் 12ம் சீர்த்திருத்தம்
3. இலங்கை குடியரசு யாப்பின் 13ம் சீர்த்திருத்தம்
4. இலங்கை குடியரசு யாப்பின் 16ம் சீர்த்திருத்தம்

12. இடைநிலைப் பொருளுக்கான உதாரணம்,

1. ஆடை 2. மருந்து 3. இயந்திரங்கள் 4. பசளை

13.
- ❋ நாட்டின் குடிமகனாக இருத்தல்
- ❋ புத்தி சுயாதீனமுள்ளவராக இருத்தல்
- ❋ 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல்
- ❋ குறித்த தேர்தல் மாவட்டத்தில் பெயர் பதிவு செய்திருத்தல்

மேற்கூறப்பட்ட விடயங்களுள் தொடர்புபட்டது,

1. சர்வசன வாக்குரிமை பயன்படுத்துவது சம்பந்தமாக
2. சாதாரண தேர்தல் முறைக்குரிய இயல்புகள்
3. கட்சி முறைக்குரிய இயல்புகள்
4. வாக்காளர் ஒருவருக்கான அடிப்படைதகைமைகள்

14. எல்லா மாகாணங்களிலும் மத்திய அரசு மற்றும் மாகாண சபை என்பவற்றின் இணைப்பாளராக செயற்படுவர்,

1. முதலமைச்சர் 2. ஆளுநர் 3. எதிர்க்கட்சி தலைவர் 4. அமைச்சர்கள்

15. குறிப்பிடத்தக்க முரண்பாடுகளைக் கொண்டிராத பன்மை பண்பாட்டு சமூகத்தைக் கொண்ட நாடு,

1. இந்தியா 2. தென் கொரியா 3. இலங்கை 4. ஐக்கிய அமெரிக்கா

16. மத்திய அரசின் அதிகாரங்களைப் பன்முகப்படுத்தல் முறைகளுள் நிர்வாக அதிகாரத்தை பன்முகப்படுத்துதல் ஒரு முறையாகும். இலங்கையில் தேசிய மட்டத்திலிருந்து பிராந்திய மட்டம் வரை நிர்வாக அதிகாரம் பன்முகப்படுத்தப்படும் விதம் பின்வருவனவற்றுள் எது?

1. தேசிய மட்டம் → மாவட்ட மட்டம் → பிரதேச மட்டம் → கிராம அலுவலர் பிரிவு மட்டம்
2. மாவட்ட மட்டம் → தேசிய மட்டம் →பிரதேசமட்டம் → கிராம அலுவலர் மட்டம.
3. பிரதேசமட்டம் → கிராம அலுவலர் மட்டம் → மாவட்ட மட்டம் → தேசிய மட்டம்
4. கிராம அரசுகள் மட்டம் →பிரதேசமட்டம் → மாவட்ட மட்டம் → தேசிய மட்டம்

கல்வி Education

17. ❋ பிற கலாச்சாரங்களை மதித்தல்
❋ சர்வ மத செயற்பாடுகள், வேலைதிட்டங்களை முன்னெடுத்தல்
❋ பிறரது கருத்துக்களை செவிமடுத்தலும், மதிப்பளித்தலும்
❋ பிற இனத்தவர்களின் மொழிகளைக் கற்றுக் கொள்ளலும், பயன்படுத்தலும்

மேலே கூறப்பட்டவையுடன் தொடர்புடையது,

1. பன்மை பண்பாட்டுச் சமூக அங்கத்தவர்கள்
2. பன்மை பண்பாட்டுச் சமூகத்தில் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரசையொருவரினால் விருத்தி செய்யப்பட வேண்டிய பண்புகள்
3. நாட்டின் நடைமுறையில் உள்ள நல்லாட்சிப் பண்புகள்
4. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் செயற்பாட்டிற்கான நல்லாட்சியின் தேவைப்பாடு

18. மனித அபிவிருத்தி அறிக்கையின் படி 2012 இல் இலங்கைக்கு உரித்தாகும் இடம்,

1. 82 2. 92 3. 66 4. 96

19. சுதந்திர வர்த்தகத்தை மேற்கொள்வதை நோக்காகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு,

1. வங்காள விரிகுடாவைச் சூழவுள்ள நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (BIMSTEC)
2. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
3. ஐரோப்பிய ஒன்றியம் (EU)
4. வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA)

20. "மோதல் முக்கோணம்" எனும் மாதிரி மோதல் தொடர்பான ஆய்வை அறிமுகப்படுத்தியவர்,

1. ஜெனஹான் கல்டுன் 2. கீரீஸ் மிடெல் 3. லெவிஸ் தோசர் 4. ஜேனர்ஜ் சிமெல்

21. மோதல் தீர்வு தொடர்பான மரபு வழிச்செயற்பாடாக அமைவது,

1. உபதேசம் 2. பேரம் பேசுதல் 3. தீர்ப்புக் கூறல் 4. இணக்கப்பாடு

22. 7 மாநகர சபைகள், 14 நகர சபைகள்,

1. மத்திய மாகாணம் 2. மேல் மாகாணம் 3. தென் மாகாணம் 4. வடமேல் மாகாணம்

23. பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி மற்றும் ஒஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது,

1 சுவிட்சர்லாந்து 2. ஸ்பானியா 3. ஐக்கிய அமெரிக்கா 4. ஐரோப்பா

24. கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கு உரித்தான நிர்வாக மாவட்டங்கள் இரண்டு உள்ளடங்கிய விடை,

1. மொனராகலை மற்றும் குருணாகல் 2. முல்லைத்தீவு மற்றும் வவுனியா
3. மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி 4. அம்பாறை மற்றும் புத்தளம்

25. ஒரு மத்திய அதிகாரபீடம் மாத்திரம் சட்டமியற்றும் உயர் அதிகாரத்தைக் கொண்டிருப்பது ஒற்றையாட்சியின் அடிப்படைப் பண்பாடும் எனக் கூடியவர்,

1. சீ.எப். ஸ்ட்ரோஜ் 20. ஏ.வீ. டைசி 3. பேராசிரியர் காணர் 4. ஐவர் ஜெனிங்ஸ்

26. பின்வருவனவற்றுள் சர்வதேச சட்டத்துடன் இணைந்த சட்டப்பிரிவுகளைக் கொண்ட விடைத் தொகுதி எது?

1. சுற்றாடல் சட்டம், முதலீட்டுச் சட்டம், சமுத்திரச் சட்டம்
2. குற்றவியல் சட்டம், சிவில்ச் சட்டம், அரசியலமைப்புச் சட்டம்
3. கண்டிய சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம்
4. கண்டிய சட்டம், குற்றவியல் சட்டம், முஸ்லிம் சட்டம்

27. வட மாகாணத்தில் தமிழர்களின் சம்பிரதாயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டம்,

1. முஸ்லிம் சட்டம் 2. தேசவழமைச் சட்டம்
3. குடியியல் சட்டம் 4. சர்வதேச சட்டம்

28. 'அ' நிரலுக்குரிய விடையை 'ஆ' நிரலில் தெரிவு செய்க,

| 'அ' | | 'ஆ' | |
|---|---|---|---|
| i - | சட்டத்தின் மூலாதாரம் | A - | தனி நபர்களுக்கிடையிலான பிரச்சினை தீர்த்தல் |
| ii - | குடியியல் சட்டம் | B - | உரோமன் டச்சு சட்டம் |
| iii - | ஒல்லாந்தரால் எமது நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்ட சட்டம் | C - | தொழிலாளர் தீர்வு சபை |
| | | D - | நீதிமன்ற தீர்ப்புகள் |
| iv - | தொழிற் பிணக்குகளை தீர்த்தல் | E - | காதி நீதிமன்றம் |

1. A,B,D,C 2. B,C,D,A 3. D,A,B,C 4. B,A,D,C

29. கொலை, கொள்ளை, களவு ஆகிய குற்றங்கள் தொடர்பான சட்டம்,

1. அரசியலமைப்புச் சட்டம் 2. குற்றவியல் சட்டம்
3. குடியியல் சட்டம் 4. சர்வதேச சட்டம்

30. முஸ்லிம் சட்டத்திற்கிணங்க வழக்குகளை விசரிப்பதற்காக உருவாக்கப்பட் நிதிமன்றம்,

1. காதி நீதிமன்றம் 2. இணக்கச் சபை 3. நீதித்துறை 4. மாகாண நீதிமன்றம்

31. இலங்கைக்கு சர்வசன வாக்குரிமை மற்றும் நிர்வாகக் குழு முறை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு,

1. டொனமூர் அரசியலமைப்பு 2. சோல்பரி அரசியலமைப்பு
3. மனிங் அரசியலமைப்பு 4. குறூ மக்கலம் அரசியலமைப்பு

32. 
- ❊ மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரின் தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தேவையான சிபாரிசுகளை சனாதிபதியிடம் முன்வைத்தல்.
- ❊ பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் மசோதாக்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனை வழங்குதல்.
- ❊ அரசின் சார்பாக அல்லது அரசுக்கு எதிராக சகல சட்ட நடவடிக்கைகளையும் கோவைப்படுத்தல்

மேற் கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுபவர்,

1. பிரதம நீதியரசர் 2. சட்ட மாஅதிபர் 3. ஒம்புட்ஸ்மன் 4. நீதி அமைச்சர்

33. விவாகம் தொடர்பான வழக்கு, பிறப்புச் சான்றிதழின் பெயர் மாற்றம், வருமானம் தொடர்பான வழக்கு போன்ற வழக்குகளை தீர்க்கும் நிறுவனம்,

1. மேல் முறையீட்டு நீதிமன்றம் விசாரிக்கம் வழக்குகள் 2. உயர் நீதிமன்றம் விசாரிக்கம் வழக்குகள்
3. மாவட்ட நீதிமன்றம் விசாரிக்கம் வழக்குகள் 4. மேல் நீதிமன்றம் விசாரிக்கம் வழக்குகள்

34. பொறுப்பு என்பது,

1. தனக்கு வழங்கப்பட்ட செயற்பாடுகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதுடன் பொறுப்பு கூறல்
2. தனக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை இணங்காணல்
3. தான் நிறைவேற்றும் செயற்பாடுகளின் பெறுபேறு
4. வினைத்திறனுடன் செயற பாடுகளில் ஈடுபடல்

35. உலக சமாதானம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கவும், பலப்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு,

1. 1946 ம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி 2. 1948 ம் ஆண்டு டிசம்பர் 10ம் திகதி
3. 1947 ம் ஆண்டு டிசம்பர் 9ம் திகதி 4. 1949 ம் ஆண்டு டிசம்பர் 10ம் திகதி

36. அனைத்து மக்களும் சுதந்திரமாகவே பிறந்துள்ளனர். அனைவரும் கௌரவம், உரிமை என்பவற்றுக்கு சம உரித்துடையவர்கள் என்று வாசகம் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தின் எத்தனையாவதாக உள்ளது,

1. 2வது வாசகம் 2. 3வது வாசகம் 3. 1வது வாசகம் 4. 4வது வாசகம்

37. A - சட்டத்தின் முன் மனிதனாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற உரிமை
B - சிந்தனை செய்யும், மனசாட்சிப்படி நடப்பதற்கு விரும்பிய சமயத்தைப் பின்பற்றுவதற்குமான உரிமை
C - சுந்திரமாக கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை
D - கல்வியை பெற்றுக் கொள்வதற்கான உரிமை

மேற்கூறப்பட்ட மனித உரிமைகளில் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மூன்றும் பொருளாதார, சமூக, கலாசார உரிமை ஒன்றையும் கொண்ட விடை

1. B,A,C,D 2. A,B,D,C 3. D,A,B,C 4. A,B,C,D

38. "நாம் புலியின் ஓர் அங்கமாவதுடன் அது எம்மில் ஒரு பகுதியாகும்" என்ற கூற்று உள்ளடங்கிய நூல்,

1. மனிதனும் சூழலும் - 1998
2. சூழலியல் கலைக்களஞ்சியம் - 1990
3. சூழல் கலைக்களஞ்சியம் - 1993
4. சியாட்டால் பிரகடனம் - 1954

39. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தீமைகளுள் ஒன்று,

1. சூழல் வெப்பநிலை உயர்வடைதல்
2. அமில மழை பெய்தல்
3. கைத்தொழில் கழிவுகள் சூழலில் சேருதல்
4. சமூகம் பொருளாதார பாதிப்புக்கள் ஏற்படல்

40. 'அ' பகுதிக்கு பொருத்தமான 'ஆ' பகுதியை தெரிவு செய்க,

| 'அ' | | 'ஆ' | |
|---|---|---|---|
| i - | அபிவிருத்தியடையும் நாடுகளின் பண்பாகும் | A - | மூலதனப் பற்றாகுறை |
| ii - | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் பிரச்சினைகள் | B - | பங்களாதேஷ் |
| iii - | அபிவிருத்தி அடைந்து வரும் நாடு ஒன்று | C - | மனித அபிவிருத்திச் சுட்டி குறைவாக காணப்படல் |
| iv - | அபிவிருத்தியடைந்த நாடுகளின் பண்பு ஒன்று | D - | நோர்வே |
| | | E - | பௌதீக பண்புச் சுட்டெண் உயர்வாக இருக்கும் |

1. A,B,C,D 2. B,A,C,D 3. C,A,B,E 4. E,A,B,D

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாண கல்வி திணைக்களம்
Western Provincial Education Department

පළමු වාර ඇගයීම - 2018
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | |
|---|---|---|
| 11 ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 | පුරවැසි අධ්‍යාපනය II පත්‍රය<br>குடியியற்கல்வி வினாத்தாள் - II<br>Civics Paper - II | පැය තුනයි<br>மூன்று மணி நேரம்<br>Three Hours |

- முதலாம் வினா கட்டாயமானது.
- வேறு 4 வினாக்களுக்கும் விடையளிக்குக.
- மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்குக.

01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

01. சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சி ஆற்ற வேண்டிய பணிகள் 2 எழுதுக.
02. அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் 2 எழுதுக.
03. அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் மூன்று உள்ளன. அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.
04. முதலாளித்துவப் பொருளாதார முறையின் அடிப்படைப் பண்புகள் 2 குறிப்பிடுக.
05. 1978 ம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒம்புட்ஸ்மனின் பிரதான செயற்பாடுகள் 2 ஐ எழுதுக.
06. நீர் மாசடையும் சந்தர்ப்பங்கள் 2 கூறுக.
07. இயற்கை முறையில் வளி மாசடையும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
08. 'அபிவிருத்தி' என்ற எண்ணக்கருவ வரைவிலக்கணப்படுத்தி கல்வியலாளர் இருவரின் பெயர்களை தருக.
09. பௌதீக வாழ்க்கைப் பண்புப் சுட்டெண்ணை (PQLI) தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் இரு அம்சங்களை எழுதுக.
10. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் 2 ஐ எமுதுக.

(2 x 20 = 40 புள்ளிகள்)

02. 01. சனநாயக ஆட்சி முறையின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக. (2 புள்ளி)

02. நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள் 3 ஐக் கூறுக. (3 புள்ளி)

03. 'சனநாயகம்' ஒரு வாழ்க்கை முறை என்ற அடிப்படையில் அச்சமூகத்தில் காணக்கூடிய முக்கிய வாழ்க்கை முறைகள் 3 ஐக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (5 புள்ளி)

03. 01. இலங்கையின் அதிகாரப் பங்கீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள் அல்லது முயற்சிகள் 2 ஐக் குறிப்பிடுக. (2 புள்ளி)

02. இலங்கையில் புராதன காலந்தொட்டு அதிகாரப் பரவலாக்கம் நிலவி வந்துள்ளமையை 3 உதாரணங்கள் மூலம் முன்வைக்கவும். (3 புள்ளி)

03. அதிகார பரவலாக்கத்தின் போது ஏற்படும் பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (5 புள்ளி)

04. 01. சமஷ்டி அரசு பற்றி வரைவிலக்கணம் கூறிய அரசியலறிஞர்கள் இருவரைப் பெயரிடுக (2 புள்ளி)

02. சமஷ்டி ஆட்சிமுறை நிலவும் நாடுகளுக்கு மூன்று உதாரணங்கள் தருக. (3 புள்ளி)

03. சமஷ்டி ஆட்சிமுறையின் அனுகூலங்கள் மூன்றைக்குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (5 புள்ளி)

kalvi.lk

05. 01. தேசிய சட்டத்தின் இரு வகைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

02. இலங்கையில் செயற்படும் உரோமன் டச்சுச் சட்டம் தவிர செயற்படும் ஏனைய மூன்று சட்டங்களைப் பெயரிடுக. (3 புள்ளி)

03. இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுகின்ற மக்களுக்குரிய முஸ்லிம் சட்டத்தின் மூலாதாரங்கள் 3ஐக் குறிப்பிட்டு முஹம்மதியர் சட்டத்தொகுப்பில் உள்ளடங்கும் விடயங்களை எழுதுக. (5 புள்ளி)

06. 01. உரிமைகளுகடன் கூடிய பிரசைகளது கடமைகள் 2 வகைப்படும். அவை எவை? (2 புள்ளி)

02. குடும்ப அங்கத்தவர் எனும் வகையில் நீங்கள் அனுபவிக்கும் உரிமைகள் 3 எழுதுக. (3 புள்ளி)

03. பாடசாலை அங்கத்தவர் என்ற வகையில் நீங்கள் பாடசாலைக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் மூன்று எழுதி ஒன்றை விளக்குக. (5 புள்ளி)

07. 01. சுற்றாடற் பிரச்சினைகள் தோன்றுவதற்கு ஏதுவான காரணங்கள் இரண்டினை குறிப்பிடுக. (2 புள்ளி)

02. மனித தேவைகளுக்காக வளங்களை வரையறையின்றியும் முறையற்ற விதத்திலும் பயன்படுத்துவதனால் ஏற்படும் சூழற் பிரச்சினைகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளி)

03. மனித செயற்பாடுகளினால் ஏற்பட்டுள்ள சுற்றாடற் பிரச்சினைகள் 3 ஐக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (5 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

සියලුම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது
*All Rights Reserved*]

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாண கல்வி திணைக்களம்
Western Provincial Education Department

පළමු වාර ඇගයීම - 2018
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | |
|---|---|---|
| 11 ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 | පුරවැසි අධ්‍යාපනය උත්තරය<br>குடியியற்கல்வி விடைகள்<br>Civics Answer | පැය තුනයි<br>மூன்று மணி நேரம்<br>Three Hours |

## பகுதி - I

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) 2 | 08) 4 | 15) 3 | 22) 2 | 29) 2 | 36) 3 |
| 02) 1 | 09) 1 | 16) 1 | 23) 1 | 30) 1 | 37) 4 |
| 03) 4 | 10) 2 | 17) 2 | 24) 4 | 31) 1 | 38) 4 |
| 04) 1 | 11) 3 | 18) 2 | 25) 2 | 32) 2 | 39) 1 |
| 05) 4 | 12) 4 | 19) 4 | 26) 1 | 33) 3 | 40) 3 |
| 06) 2 | 13) 4 | 20) 1 | 27) 3 | 34) 1 | |
| 07) 3 | 14) 2 | 21) 3 | 28) 2 | 35) 2 | |

## பகுதி - II

01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

01. ஆளுங்கட்சியினது சிறந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக நடாத்தப்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
ஆளுங்கட்சியின் செயற்பாடுகளை ஆராய்ந்து அபிவிருத்திக்கான விமர்சனங்களை முன்வைத்து ஆளுங்கட்சியை நல்வழிப்படுத்தல்.
ஆளுங்கட்சியின் சனநாயக விரோத செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்தல்.

02. மக்கள் தமது கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரித்தல்.
தான் தோன்றித்தனமான ஆட்சியை தடுத்தல்.
ஆளுங்கட்சியின் பாதகமான தீர்மானங்களை விமர்சிப்பதன் மூலம் அதனை திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பு காணப்படுதல். (பக்கம் 8)

03. எதனை, எந்தளவு உற்பத்தி செய்வது?
எவ்வாறு உற்பத்தி செய்வது?
யாருக்காக உற்பத்தி செய்வது?

04. போட்டித்தன்மை வாய்ந்த சந்தை முறை, உற்பத்தி காரணிகளின் பெரும்பான்மை உரிமையை தனியார் பெற்றிருத்தல், வருமானம் சமமற்ற விதத்தில் பகிரப்படும், இலாப நோக்கம்.

05. அனைத்துப் பிரசைகளினதும் அடிப்படை இரிமைகள் மீறப்படுவதை தருத்தல்.
சகல நிர்வாக அநீதிகளிலிருந்தும் பிரசைகளைப் பாதுகாத்தல்.

06. கைத்தொழில்கள் மூலம், விவசாய நடவடிக்கைகள் மூலம், இயற்கை காரணிகள் மூலம்

07. எரிமலை வெடிப்பு, காட்டுத்தீ, புழதிப் புயல்

08. டட்சிசியர்ஸ் கிங்டல் பர்க் ஐக்கிய நாடுகள் சபை

09. எழுத்தறிவு, பிறப்பின் போதான ஆயள் எதிர்பார்ப்பு சிசு மரண வீதம்

10. மூலதன குறைபாடு, மதனிலைப் பொருட்களின் விலை தளம்பல், பாதகமான சென்மதி நிலுவை, வலுச்சக்தி செருக்கடி, மூளைகாலிகளின் வெளியேற்றம்.

02. 01. நேரடி சனநாயகம், மறைமுக சனநாயகம்

02. தற்கால அரசுகளின் விசாலமான நிலப்பரப்பு அதிகரித்த சனத்தொகை சமூகத் தேவைகளின் சிக்கல் வாய்ந்த தன்மை எல்லாப் பிரசைகளையும் ஓரிடத்தில் ஒன்று திரட்டுவதிலுள்ள சிரமம்

03. பிறர் கருத்துக்களை மதித்தல், கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளல், சமத்துவம் பேணல், உரிமைகளை அனுபவிப்பதோடு கடமைகளை நிறைறேற்றல். (கருத்து - 3 புள்ளி, விளக்கம் - 2 புள்ளி)

03. 01. 1928 - டொனமூர் ஆணைக்குழு அறிக்கை
1945 - சோல்பரி ஆணைக்குழு அறிக்கை
1957 - ரட சபா பண்டா - செல்வா ஒப்பந்தம்

02. கமிக, பருமக, மபறுமுகா போன்ற பதவிகள் பொலன்னறுவைக் காலம் - மகா பராக்கிரமபாகு மன்னர் பிரதேச ஆட்சியாளர் நியமித்து அதிகாரம் வழங்கியமை, 1815 ல் ரெசிடண்ட் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தமை.

03. வளப் பகிர்வின் குறைபாடு காரணமாக சில பிரதேச நிர்வாக அலகுகளுக்கு அதிக வளங்களும் சில அலகுகளுக்கு குறைந்தளவு வளங்களும் பகிரப்படல், அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதியைத் தேடிக் கொள்வதில் உள்ள சிரமம். (தரம் 11 பக்கம் 33)

04. 01. ஏ.வீ. டைசி, கலாநிதி கே. சீ. வியர்

02. ஐக்கிய அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, இந்தியா, அவுஸ்திரேலியா

03. பல்வின சமூகமொன்றில் பல்வகைமைக்கு மதிப்பளிக்கும் வகையில் பொதுத் தேசியம் கட்டியெழுப்ப சனநாயக ஆட்சி சக்தி வாய்ந்ததாகக் காணப்படல், பரந்த நிலப்பரப்பு கொண்ட நாடுகளில் நிர்வாக ரீதியில் சிறந்த தீர்மானம் எடுக்கக் கூடியதாயிருத்தல் (விடயம் - 3 புள்ளி, விளக்கம் - 2 புள்ளி)

05. 01. அரசியல் யாப்புச் சட்டம், குற்றவியல் சட்டம், குடியியல் சட்டம்

02. கண்டியர் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம்

03. இஜ்லாம் சட்ட மூலாதாரங்கள் -
1. அல்குர்ஆன்
2. அல் ஹதீஸ்
3. இஜ்மா, கியாஸ்

முஹம்மதியர் சட்டதொகுப்பு - முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்து, மரபுகள், உரிமைகள், வளர்ப்புப்பிள்ளைகள், சொத்துரிமை

06. 01. சட்ட ரீதியான கடமைகள், பண்பாட்டு ரீதியான கடமைகள்

02. உணவு, போசாக்கு, அன்பு, அரவணைப்பு, காப்பு உறையுள், கல்வி என்பன

03. கற்றல் செயற்பாடுகளை சிறந்த முறையில் மேற்கொள்ளல், ஆசிரியர்களுக்கு கீழ்படிதல், ஒழுக்கம் பேணல், பாடசாலை சட்டதிட்டங்கள், மற்றும் வளங்களை பாதுகாத்தல். (விடயம் - 3 புள்ளி, விளக்கம் - 2 புள்ளி)

07. 01. இயற்கை காரணிகளினால் ஏற்படும் பாதிப்பு மனித செற்பாடுகளால் ஏற்படும் பாதிப்பு

02. உணவு மற்றும் போசாக்கு பிரச்சினை, நொய் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள், விபத்துக்களால் எற்படும் உயிர் மற்றும் சொத்திழப்புக்கள், சமூக பொருளாதார சீரழிவுகள்

03. புவி வெப்பமடைதல், வளி மற்றும் நீர் மாசமைதல், வானிலை மாற்றங்கள்
உயிர்ப்பல்வகைமையயின் பாதிப்பு மண் வள மற்றுப்போதல், அமில மழை பொழிதல், ஓசொன் படலம் பாதிப்படைதல். (விடயம் - 3 புள்ளி, விளக்கம் - 2 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

Follow and Get papers Daily ..!

Education
கல்வி
අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page